Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 61

National Tamil Daily தேசிய தினசரி

குரோதி பங்குனி 30 துல் ஹஜ் பிறை 9 (12-4-65) திங்கட்கிழமை

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா – இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |



விஜயலெட்சுமி ஆபரண மாளிகை
நங்கையர் விரும்பும் அழகிய தங்கப்பவுண் நகைகளை தயாரித்து அளிப்பவர்கள்
ஓடர் நகைகள் உடனுக்குடன் செய்து தருவோம்.
ஆஸ்பத்திரி வீதி
ஊர்காவற்றுறை.

# "அரசாங்கத்துக்கு சிறிது அவகாசம்"

## கொடுக்கும்படி மக்களுக்கு எஸ். ஜே. வி. கோரிக்கை

உடுப்பிட்டி, ஞாயிறு

"நாம் ஆதரிக்கும் கட்சி தான் அரசாங்கத்தை அமைக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டதன் பின்னர் எமது கட்சியின் நிர்வாகசபை மூன்று மணி நேரம் ஆலோசனை செய்த பின்னரே ஐக்கியதேசியக்கட்சியை ஆதரிப்பது என்ற முடிவுக்கு வந்தோம். எமது பறிபோன உரிமைகள் சிலவற்றைத் தருவதாக யு. என். பி. ஒப்புக்கொண்டது. கடந்த ஒன்பது வருடகாலமாக எதிர்க்கட்சியினராகவிருந்த நாம் இம்முறை அரசாங்கத்துடன் இணைந்தது ஓர் பெரிய மாற்றமாகும். இதனால் எமது மக்களுக்கு அதிக நன்மை ஏற்படுமென்றே கருதுகிறோம். நேற்றைய தினம் பார்லிமெண்டில் நடைபெற்ற விவாதத்தின்போது திரு. டட்லி சேனநாயக்கா தாம் தமிழ்மக்களுக்கு உரிமை கொடுப்பதாக ஒப்பந்தம் செய்தால் "கொடுத்தே தீருவேன்" என்று கூறியுள்ளார். இந்த நேரத்தில் தமிழ்மக்களுக்கு நான் ஓர் செய்தி விடுக்கவேண்டியுள்ளது. சொற்ப காலத்திற்கு அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்துப் பொறுத்திருந்து பாருங்கள். ஆனால் நன்மையே விளையும்".

இவ்வாறு அகிலஇலங்கைத் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் சென்ற தேர்தலில் தமிழரசுக்கட்சி அபேட்சகர்களாகப் போட்டியிட்ட அனைவருக்கும் உள்ளூராட்சிமன்ற அமைச்சர் திரு. எம். திருச்செல்வத்திற்கும் தமிழரசுக்கட்சி உடுப்பிட்டிக் கிளையினரால் செல்வியடி கட்டையடி மைதானத்தில் நடாத்தப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

# சீன தூதர்களுக்கு வெளியேற்ற உத்தரவு

பம்பலப்பிட்டி, ஞாயிறு

இலங்கையில் கம்யூனிஸ்டுகள் வந்து புரட்சித்தன்மையான வேலைகளில் ஈடுபடுவதன் காரணத்தினால் இலங்கையின் வெளிநாட்டுக் காரியாலயத்தினர் சில திடீர் நடவடிக்கைகளை தற்பொழுது எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

சீன மக்கள் குடியரசு ஸ்தானிகர் காரியாலயத்திலிருந்தும் இரு ஸ்தானிகர்கள் உடனடியாக இலங்கையை விட்டுவிலக வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தினால் கேட்கப்பட்டுள்ளனர். இந்த இரு ஸ்தானிகர்களுக்கும் இலங்கையில் இருப்பதற்கு விசா நீட்டை நீடிக்கவேண்டும் என்ற மக்கள் சீனக் குடியரசுக் காரியாலயத்தினரின் வேண்டுகோள் இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இந்தோனேஷியாவிலிருந்து இங்கு வரவிருந்த இரண்டு கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்களுக்கும் விசா கொடுக்கப்படவில்லை. இவர்கள் இலங்கை தோட்டத்தொழிலாளர் சங்க

(5-ம் பக்கம் பார்க்க)

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு
8-4-65 — 12-4-65
மலிவு விற்பனை
நடைபெறும்;
கைத்தறிச் சேலைகள் 100, 120, 160 நம்பர்
மற்றும் இலங்கா வேட்டி சால்வை சேலைகள்
வோயில் வேட்டிகள்
மற்றும் எல்லா ஜவுளி வகைகளும் விலைகள்
குறைக்கப்பட்டிருக்கின்றன.
தேவைக்கு முந்திக் கொள்ளுங்கள்
ஆ. அப்பையா அன் கோ.,
82, கே. கே. எஸ். ரோட், 54, [illegible]
போன்: 506 யாழ்ப்பாணம்.

### ஆளுவதற்கு எமக்கும் உரிமை

கைத்தொழில் அபிவிருத்தி? — தலவைதாபன அமைச்சர் திரு எம் திருச்செல்வம் பேசுகையில், குறிப்பிட்டதாவது:-

"நான் எனது அரசியல் திறமையால் அமைச்சராகவில்லை தமிழரசுக்கட்சியின் சார்பிலேயே இப்பதவி கிடைத்தது. நாங்கள் தமிழினத்திற்கும், தமிழ்மொழிக்கும், கலாச்சாரத்திற்கும் ஒருபோதும் துரோகம் செய்யமாட்டோம். நாம் மந்திரிப்பதவியைத் தேடி ஒருபோதும் போகவில்லை. நாமும் இந்நாட்டு அரசாங்கத்துடன் சேர்ந்து மக்களை ஆள முடியும் என்பதை எடுத்துக்காட்டவே தேசிய அரசாங்கத்தில் நான் ஒரு மந்திரியாகச் சேர்ந்தேன். எங்களுக்கும் ஆளுவதற்கு உரிமையுண்டு. சிறிதுகால அவகாசம் தாருங்கள் தமிழ்மக்களின் இழந்த உரிமைகளை மீண்டும் பெற்றுத் தருகிறோம்".

சாவகச்சேரித் தொகுதி எம்.பி. திரு வ. ந. நவரத்தி

(6-ம் பக்கம் பார்க்க)

# விமானவிபத்தில் 54 பேர் பலி

டமாஸ்கஸ், ஏப்ரல் 11

டமாஸ்கஸுக்கு அருகில் இன்று காலை நிகழ்ந்த ஒரு விமான விபத்தில் அதிலிருந்த 54 பிரயாணிகளும் [illegible]

# இந்திய வம்சாவளியினர் பற்றிய ஒப்பந்தம்

## நல்லமுறையில் அமுலாகும் என சச்சார் நம்பிக்கை

ஹைதராபாத், ஏப்ரல் 11

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் சம்பந்தமாக சமீபத்தில் இலங்கையும் இந்தியாவும் செய்துகொண்ட ஒப்பந்தம் இருதரப்பும் நல்லெண்ணத்துடனும் கூட்டுறவுடனும் நல்ல முறையில் அமுல் செய்யும் என்று நம்பலாம் என்று இலங்கையில் இந்திய புதிய ஹைகமிஷனராகப் பதவி பெற்றும் பெருட்டு இலங்கைக்குச் செல்லும் திரு. பீம்சென் சச்சார் இங்கு நிருபர்களிடம் கூறினார்.

இந்திய இலங்கை நட்புறவு பலப்படுமெனவும் சுமுகமான உறவு மேம்பெறுமெனவும் திரு. சச்சார் கூறினார். இருநாடுகளுக்குமிடையில் பொதுவான உறவுகள் அதிகம் இருப்பதாகவும் வெளிவிவகாரக் கொள்கையிலும் இருநாடுகளுக்கும் பொதுவான கொள்கையுண்டென்றும் திரு. சச்சார் கூறினார்.

# இறந்தவர் உயிர் பெற்றார்

சுழிபுரம் ஞாயிறு

பணிப்புலத்தைச் சேர்ந்த கந்தசாமி என்பவர் இரணைமடு குளத்தில் வேலைபார்த்துவருகின்றார். அவரின் மனைவிக்கு அனுப்பப்பட்ட தந்தியில் கந்தசாமி காலமானார் என்ற வார்த்தைகள் மட்டுமே இருந்தது வீட்டார் சுகம் கொண்டாடுவதுடன் பிரேதத்தை எடுப்பதற்காக விசேட மோட்டார்வண்டி ஒன்றுடன் இரணைமடுவுக்கு சென்றனர். அங்கே பணிப்புலம் கந்தசாமி சுகமாக இருப்பதைக் கண்ட அவரது உறவினர் மிகவும் அதிசயம் அடைந்தனர். உடனே நடந்த விஷயத்தை அவருக்கு விபரமாக கூறியதுடன் உறவினருக்கும் உடன் அறிவித்தனர். இரணைமடுவில் வேறு கந்தசாமி என்ற பெயருடைய ஒருவர் இறந்தது உண்மைதான் என்றும் விஷயத்தை விளங்காமல் தவறுதலாகத் தந்தியடித்ததால் தான் மேற்படி சம்பவம் நடைபெற்றது என்பதும் பின்னர் தெரியவந்தது.

# தேஷ்முக் மறைவு

புதுடில்லி, ஏப்ரல் 11

நேற்றிரவு காலமான முன்னாள் இந்திய மத்திய உணவு விவசாய மந்திரி திரு. பஞ்சாப்ராவ் தேஷ்முக்கின் ஈமக்கிரியைகள் இன்று காலை புதுடில்லியில் நடைபெற்றது பெருந்தொகையான மக்கள் இதில் கலந்துகொண்டனர்.

பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி, இந்திய பார்லிமெண்ட் சபாநாயகர் மற்றும் பலர் இன்று காலை தேஷ்முக்கின் இல்லத்துக்குச் சென்று தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்

# திருடர்கள் நடமாட்டம்

சண்டிலிப்பாய், ஞாயிறு

சண்டிலிப்பாய் வடக்கில் திருடர்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் ஊரிலுள்ள பல இளைஞர்கள் ஒன்று சேர்ந்து ஓர் படை திரட்டி இரவில் காவல்புரிந்து வருவதாகத் தெரியவருகிறது.

இத்திருடர்கள் ஆடு மாடு முதலியன பிடித்து வேறு இடங்களுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளார்களாம். இது விஷயம் பொலிசாரின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்ளது.

# பாடசாலை இல்லப் போட்டி

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை மெதடிஸ்த உயர்நிலைப் பாடசாலையில் இல்லங்கட்கிடையே வருடாந்த உடற்பயிற்சிப் போட்டிகள் கல்லூரித் தலைவி செல்வி ஆர். எம். சின்னையா தலைமையில் நடைபெற்றது.

வட பிரதேச உடற்பயிற்சித் துறைப் பரிசோதகர் திரு. ஆர். சிவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இப்போட்டியில் பங்குகொண்ட ஐந்து இல்லங்களும் மூன்று பிரிவாகப் போட்டியில் கலந்துகொண்டன.

மேல்மத்திய பிரிவுகளில் நீல இல்லமும், கீழ்ப்பிரிவில் பச்சை இல்லமும் முதனிலைகளைப் பெற்று வெள்ளிக் கிண்ணங்களைச் சுவீகரித்துக் கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

தமிழ்-சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை (13-4-65) ஈழநாடு காரியாலயத்துக்கு விடுமுறையாதலால் புதன்கிழமை (14-4-65) மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

### அணிவாக்கு

உண்மையான ஜனநாயகம் அஹிம்சையின் விளைவாக இருக்க முடியுமென நம்புகிறேன். உலக நாடுகளின் சமஷ்டி அமைப்பையும் அதே அடிப்படையில் தான் எழுப்ப முடியும். உலக விஷயங்களில் பலாத்காரத்தை அடியோடு கைவிட வேண்டும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 589.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு பங்குனி மீ 30 உ. ( 2-4-65)


## விஷமச் செயல்கள்

இன, மத கலவரத்தைத் தூண்டிவிடும் முயற்சியாக கொழும்பிலும் சுற்றுவட்டாரங்களிலும் விஷமிகள் ஆரம்பித்துள்ள தார்ப்பூச்சு இயக்கம் சம்பந்தமாக பரிபூரண விசாரணை நடத்துமாறு பொலிசாருக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. நாட்டின் அமைதியைக் குலைக்கக் கூடிய விஷமத்தனமான நடவடிக்கைகளை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருப்பது ஆறுதலளிப்பதாகும்.

விஷமச் செயல்களில் ஈடுபட்டுள்ளவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்கத்தான் வேண்டும். இதனால் மட்டும் நாட்டின் அமைதியையும் தேசிய ஒற்றுமையையும் நிலைநிறுத்திவிட முடியாது.

1958-ம் ஆண்டில் ஏற்பட்ட துரதிருஷ்டவசமான வகுப்புக் கலவரம் ஏற்படுவதற்கு முன்னர், இதுபோன்ற தார்ப்பூச்சு இயக்கங்களும் வீடுகளுக்கும், கடைகளுக்கும் 'அடையாளம்' இடும் இயக்கமும் நடைபெற்றதுடன் வெளியேறக் கடிதங்களும் கூட பலருக்கும் அனுப்பப்பட்டன. இதுபற்றி அப்பொழுது பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டும் அதைப் பெரிய விஷயமாகக் கருத அன்றைய அரசாங்கம் தவறியது. அதன் விளைவுதான் 1958-ம் வருட வகுப்புக்கலகமானது. தேசிய அரசாங்கம் இவ்விஷயத்தில் கவனக் குறைவாக இருக்காது உடனடியாக தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள முன்வந்திருப்பது நல்லதே.

இடதுசாரி ஆதரவாளர்கள் தான் இன, மத, வகுப்புக் கலகத்தைத் தூண்டிவிடுகிறார்கள் என்ற பொதுவான ஒரு கருத்து சில இடங்களில் நிலவுகிறது. பாராளுமன்றத்தின் முதல் [illegible] துரதிஷ்டவசமாகப் பேசிய பேச்சுகளும் இதற்கு ஆதாரமாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. இடதுசாரி ஆதரவாளர்களெனச் சொல்லிக் கொண்டு சமூகவிரோதிகளும் விஷமிகளுமே இந்த இழிசெயலில் ஈடுபட முடியும்.

சிங்கள மக்களும் தமிழ்மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையில் சிங்களச்சட்டமும் தமிழ்மொழி உபயோகச்சட்டமும் அமுல் நடத்தப்படுமென்றும் மாவட்டசபைகள் நிறுவப்படுமென்றும் முன்னைய கூட்டு அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. இதர மதங்களின் வழிபாட்டுச் சுதந்திரத்தில் தலையீடு இருக்காதென்றும் அந்த அரசாங்கம் உறுதி கூறியிருந்தது. இன்றைய தேசிய அரசாங்கமும் தனது முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்தில் இதையேதான் தெரிவித்திருக்கிறது. இந்நிலையில் இடதுசாரிகளோ முன்னைய அரசாங்கத்தினரோ இன, மத பூசல்களைக் கிளப்புவதற்கு எவ்வித நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை.

விஷமிகள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாமலிருக்க பொலிசாரின் நடவடிக்கை மட்டும் போதாது. இந்த அரசாங்கத்தினது கொள்கைத் திட்டங்கள் பெருமளவில் முன்னைய அரசாங்கத்தினது கொள்கைத் திட்டங்களை ஒத்திருப்பதால் இடதுசாரிக் கட்சியினரையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரையும் முக்கிய விஷயங்களில் அரசாங்கம் கலந்தாலோசிப்பது திட்டங்களைச் சுமுகமாகச் செயல்படுத்தவும் நாட்டில் அமைதியை நிலைநாட்டவும் பெரும் உதவியாக இருக்கும். தங்களையும் முக்கிய விஷயங்களில் கலந்தாலோசிக்க வேண்டுமென்பதே எதிர்க்கட்சியினரின் விருப்பமாகும். தேசியப் பிரச்னைகளுக்குச் சகல கட்சியினரையும் கலந்தாலோசித்து தீர்வுகாண இன்றைய அரசாங்கம் முன்வந்தால் அது உண்மையில் ஒரு தேசிய அரசாங்கமாகவே திகழும். நாட்டில் விஷமச் செயல்களுக்கும் இடமிருக்காது. அமைதி நிலவும். நாடும் சுபிட்சப்பாதையை நோக்கி முன்னேறும்.

# நாட்டில் அமைதி நிலவும்; மக்கள் வாழ்க்கை சிறக்கும்

## புத்தாண்டின் இராசிபலன்

— 'அத்திரி' எழுதுவது —

நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணி 7 நிமிஷமளவில் விசுவாவசு வருஷம் பிறக்கிறது. புத்தாண்டில் பொதுவாக மக்களின் வாழ்க்கை சிறந்து விளங்குமென்றும் நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவுமென்றும் நமது சோதிடர் இங்கு விளக்கிக் கூறுகிறார். புததாண்டில் உங்கள் இராசிப்பலன் எப்படியிருக்கிறதென்பதையும் இங்கு பார்த்துக்கொள்ளலாம்.

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் விசுவாவசு வருஷம் சித்திரை மாதம் 1-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணி 57 நிமிஷமளவில் உத்திரம் முதலாம் பாதத்தில் கடகலக்கினத்தில் இந்த விசுவாவசு வருஷம் ஜனனமாகிறது.

இலக்கினாதிபதி சந்திரன் செவ்வாயுடன் கூடி சசிமங்கள யோகம் பெற்றிருப்பது நன்மை. இவ்வாண்டில் பொதுவாக மக்களின் வாழ்க்கை

### புத்தாண்டு ஜனித்த நேரத்தில் உள்ள கிரக நிலை

| | | | |
|---|---|---|---|
| புத | குரு | சுயா [illegible] | 2 |
| சனி | | | லக |
| 7 | | | சந் செவ் |
| 6 | [illegible] | 4 | 3 |

சிறந்து விளங்கும். நாட்டில் அமைதியான சூழ்நிலையும் வாழ்க்கைத் தரத்தில் உயர்வும் கோயில்கள் கூடுதலும் செல்வங்கள் கட்டுப்படுத்தலும் ஏற்படும்.

இரண்டாம் வீட்டில் சந்திரன் செவ்வாய் கூடி நிற்பதால் நாட்டின் நிதி நிலைமை ஓரளவு சீரடையும்.

நான்காதிபதி சுக்கிரன் உச்சமடைந்திருப்பதினால் நாட்டில் கல்வி வளர்ச்சி அதிகரிப்பதுடன் கல்வி ஸ்தாபனங்கள் அதிகரித்தலும் புதிய இல்லங்கள் கட்டு படுதலும் பொது ஜனங்களிடையே அறிவுவிருத்தியடைதலும் ஏற்படும்.

ஐந்தில் கேது நிற்பதனாலும் ஐந்தாம் வீட்டை வியாழன் பார்ப்பதினாலும் நாட்டில் ஜனத்தொகை அதிகரிப்பு ஏற்படும். அப்படியிருந்தாலும் சிசுக்களுக்கு ரோகங்கள் அதிகரிக்கும். அதனால் அற்ப சேதங்களும் ஏற்படும்.

பாக்கியாதிபதி இலாபஸ்தானத்திலிருப்பதால் படிப்பும் பெரும் மூதியவர்களும் கல்விமான்களும் மதிக்கப்படுவார்கள். அவர்களுடைய செல்வாக்கு நாட்டிலதிகரிக்கும்.

ஏழாதிபதி எட்டில் ஆட்சி பெற்றிருப்பதனால் நாட்டில் பிறப்பும் பார்க்க இறப்பு குறைவாக இருக்கும்.

பெண்களுடைய முன்னேற்றம் குறைந்தாலும் கல்வி வளர்ச்சியில் அவர்கள் இந்தாண்டில் முன்னேறுவார்கள். வியாழனும் சுக்கிரனும் பலம் பெற்று பரிவர்த்தனமடைந்திருப்பதால் பொன் வெள்ளி முதலியன மலியும். உணவு தானியங்கள் ஓரளவு அபிவிருத்தியடையும். பொதுவாக இந்தாண்டு நம்நாட்டுக்கு நன்மையே விளைவிக்கும்.

### மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் காலில் ஜெனனமானவர்களுக்கு)

உங்களுக்கு எவ்வளவு செல்வாக்கும் மதிப்பும் இருந்தாலும் எதிர்பார்க்கக் கூடிய அனுகூலங்கள் இதுவரை அடைந்திருக்க மாட்டீர்கள். எந்தவிதத் தொழில் உள்ள இந்த இராசிக்காரருக்கு இவ்வாண்டு மிகவும் பணநெருக்கடியான காலம். எந்தவித முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டாலும் முன்னுக்குவரமுடியாமல் மிகவும் கவலைப்பட நேரிடும் நீங்கள் பொறுமையுடன் நடந்து கொள்வது நல்லது. ஆண்டுப் பிற்பகுதியில் நீங்கள் நாடிய ஒருவரால் நல்ல அனுகூலங்கள் ஏற்படும், கைவிட்டுப் போன பொருட்கள் ஆவணி [illegible] உங்களுக்கு [illegible] மாதங்களில் அடிக்கடி அற்ப ரோகங்கள் ஏற்படும். நீங்கள் எண்ணியிருக்கும் எண்ணங்கள் சில ஆண்டுப் பின்பகுதியில் கைகூடும். ஆவணி, புரட்டாதி கார்த்திகை, தை ஆகிய இம் மாதங்கள் உங்களுக்கு அனுகூலமாயிருக்கும்.

### இடபம்

(கார்த்திகை, 2, 3, 4-ம் காலும் ரோகிணி மிருகசீரிடம் 1, 2ம் காலில் ஜெனனமானவர்களுக்கு)

நீங்கள் எண்ணியிருந்த பல காரியங்கள் இவ்வாண்டில் கைகூடும், இந்த ஆண்டில் உங்களுக்கு பலவித உத்தியோகங்களும் உதவிகளும் தானாகவே வந்துசேரும். அவற்றைப் பயன்படுத்திக் கொள்வது உங்களுடைய கடமையாகும். உங்கள் உறவினர் ஒருவருடைய மங்களகரமான காரியத்தில் உங்களுக்கு மிகவும் ஈடுபாடு இருக்கும். எவ்வளவு எதிர்ப்பு இருந்தாலும் நீங்கள் தீவிரமாக இந்தக் காரியத்தைச் செய்து முடிப்பீர்கள். பொருள் வரவு முடையில்லாமல் வந்தாலும், அபரிமிதமான செலவுகளை கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடுவீர்கள். தைமாதத்தில் மிகவும் முக்கியமான சம்பவம் ஒன்று உங்கள் குடும்பத்தில் இடம்பெறும். மார்கழி மாதம் உங்களுக்கு அவ்வளவு சிறந்ததல்ல, பொருள் முடையும் சுகக் குறைவும் இந்த மாதத்தில் தலைகாட்டும்.

### மிதுனம்

(மிருகசீரிடம் 3, 4ம் கால்களும் திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் கால்களிலும் ஜெனனமானவர்களுக்கு)

உங்களுக்குப்பணவசதியில்லாவிட்டாலும் செந்தக்காரர்களுடைய உதவியில்லாவிட்டாலும் அயலவர்களுடைய ஆதரவு மிகவும் உண்டு. இருந்தாலும் இந்த ஆண்டில் 'வறுமை யென்றும் கடவுளே வறுமையென்றும் பட்டதான் உங்கள் வாழ்க்கை நகலாடுகிறது. இடம்விட்டு இடம் மாறியிருந்தால் அதனால் சுகம் ஏற்படக்கூடும் என்ற எண்ணம் மனதில் இருந்தால் அதைக் கைவிடவும். அதனால் ஒரு புண்ணியமும் ஏற்படப்போவதில்லை, ஒருவரை நம்பி அவருடைய உதவியினால் மேன்மையடையலாம் என்று எண்ணியிருந்தீர்களானால் அது கண்குதிரையை நம்பியதுபோல் முடியும். எதற்கும் முன் ஜாக்கிரதையாக இருப்பது நன்று. உங்களுடைய மனம் நிமிஷத்துக்கு நிமிஷம் ஒரு நிலையில் இல்லாமல் மாறிக்கொண்டேயிருக்கும்.

### கடகம்

(புனர்பூசம் 4ம் கால் பூசம் ஆயிலியத்தில் ஜெனனமானவர்களுக்கு)

மனத்தைரியத்துடன் நீங்கள் எக்காரியத்திலும் ஈடுபடலாம், கையில் பணமில்லாமல் விட்டாலும் காரிய சாதனை செய்யக்கூடிய கிரகநிலை இவ்வாண்டில் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. பலவிதமான பொறுப்புக்களை உங்களுடைய உறவினர்கள் உங்களிடம் சுமத்துவார்கள், எந்தக்காரியத்தையும் நிறைவேற்றக் கூடிய சக்தி உங்களுக்கு இந்த ஆண்டில் உண்டு. தை, மாசி மாதங்களில் நீங்கள் எடுத்த

(5-ம் பக்கம் பார்க்க)

## நாடும் நடப்பும்

நேரு மறைந்துவிட்டாரா? இது என்ன கேள்வி; அவர் மரணமடைந்து ஒரு வருடமும் முடிவடையப் போகிறதே என்று கேட்கிறீர்களா? உண்மைதான்.

'கூப்பியகரங்களுடனும் மலர்ந்த முகத்துடனும் நேருஜி "நமஸ்தே" கூறுகிறார். இப்படி ஒரு அட்டைப்படத்துடன் ஒரு அழகான மலர் நேற்று என் கைக்குக் கிடைத்தது. அட்டைப்படம் படமாகவே தெரியவில்லை. நேருஜியை உயிருடன் பார்ப்பதுபோலிருக்கிறது. அமெரிக்க தகவல் நிலையம் வெளியிட்டுள்ள இந்த மலரின் உள்ளேயும் நேருஜியின் அழகான படங்களும் அவரது அமரவாக்கியங்களும் காட்சியளிக்கின்றன. "ஜவஹர்லால் நேருவை அமெரிக்கா நினைவில் வைத்துள்ளது" நேருவும் ட்ரூமனும் காரில் செல்கிறார்கள், ஐஸனோவருடன் நேரு கைகுலுக்குகிறார், கென்னடியுடன் உட்கார்ந்து பேசுகிறார். அமெரிக்கக் குழந்தைகளுடன் மகிழ்கிறார், இப்படி அமெரிக்கா நேருஜியின் நினைவை அவரது மறைவுக்கு பின் அவரது 75 வது பிறந்தினத்தில் வெளியிட்டு பெருமையடைந்துள்ளது. பார்தான் நேருஜியை மறக்கமுடியும்!

• • •

மாலைப்பொழுதை இன்பமாகக் கழிக்க விரும்புகிறவர்கள் நாடகம், சினிமா போன்ற நிகழ்ச்சிகளுக்குச் செல்கிறார்கள். பகல் முழுவதும் உழைத்துக் களைப்பவர்கள் மாலைப்பொழுதை நிம்மதியாகக் கழிக்க விரும்புகிறார்கள். இதனால்தான் சிலர் துக்கமானமுடிவைக் கொண்ட சினிமாவுக்கோ நாடகத்துக்கோ செல்ல விரும்புவதில்லை, உங்களில் யாராவது மாலைப் பொழுதை தமாஷாகக் கழிக்க விரும்பினால், மாதமொருமுறை நடைபெறும் யாழ்ப்பாண மாநகரசபைக் கூட்டத்துக்குச் சென்று பாருங்கள்! விசேஷ கூட்டமானால் கண்டிப்பாகப் போங்கள். வேடிக்கையாகப் பொழுது போக்கலாம்.

• • •

முன்னாள் கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவர் குணதிலகாவும் முன்னாள் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலையும் திடீரென்று அரசியல் அரங்கில் தோற்றியுள்ளனர், இவர்கள் இருவருக்கும் புதிய பதவிகள் கிடைக்கலாமென அரசியல் வட்டாரங்களில் கருத்து நிலவுகிறது. கவர்னர் ஜெனரல் பதவியும் இவர்களின் பெயர்களுடன் சேர்ந்து அடிபடுகின்றன. முன்னாள் பிரதம நீதியரசர் திரு பஸநாயக்காவின் பெயரும் பெரிய பதவிக்கு அடிபடுகிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.

• • •

முத்தமிழ்மணி வி. எஸ். எஸ். மணியாகவதருக்கு நியூமோனியா ஜுரம் கண்டுள்ளதாம், அவரது கதாப்பிரசங்க நிகழ்ச்சிகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. அவர் விரைவில் குணமடைந்து தமது சமயப் பணியைத் தொடர்ந்து ஆற்ற இறைவன் துணைபுரிய வேண்டும்.

—ஊர்சுற்றி

### புதிய திட்டத்திற்கு வரவேற்பு

பம்பலப்பிட்டி, ஞாயிறு வர்த்தக ஸ்தாபனங்களிலுள்ள லாபங்களை தொழிலாளர்களுக்கும் பகிர்ந்து முதலாளி - தொழிலாளி ஒற்றுமையையும் தொழில் முன்னேற்றத்தையும் செய்யவேண்டுமென்று தேசிய அரசாங்கம் சிம்மாசனப்பிரசங்கத்தில் கூறியதை அனேக வர்த்தக ஸ்தாபன நிர்வாகிகள் வரவேற்றுள்ளார்கள் என்று தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்திய - பாகிஸ்தான் எல்லையில் மோதல்

## 34 பாக். துருப்புக்கள் பலி; 4 பேர் கைது

## எல்லைக்காவல் இந்திய ராணுவத்திடம்

### அமெரிக்க ஆயுதங்கள் உபயோகிக்கப்பட்டனவாம்

கல்கத்தா, ஏப்ரல் 11

இந்திய-பாகிஸ்தான் எல்லையில் கட்ச்-சின் பகுதியில் கஞ்சாகோட் இடத்தில் எல்லைக்காவல் பணியை இந்திய ராணுவம் சென்ற வெள்ளிக்கிழமை மாலை ஏற்றுக் கொண்டது. வெள்ளிக்கிழமை அதிகாலையிலிருந்து இப்பகுதியிலிருந்த இந்திய எல்லைக் காவல் பொலிஸ்நிலைகள் மீது பாகிஸ்தான் துருப்புகள் கடுமையாகத் தாக்கியதைத் தொடர்ந்தே எல்லைக் காவல் பொலிஸார் வாபஸ் பெறப்பட்டு ராணுவம் அனுப்பப்பட்டது என்று ஒரு அதிகாரி தெரிவித்தார்.

இங்கு பாகிஸ்தான் ராணுவத்துக்கும் இந்திய ராணுவத்துக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பில் 34 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டதாகவும் நால்வர் கைதுசெய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இந்திய இராணுவம் எல்லைக்காவல் பொறுப்பை ஏற்பதற்கு முன்னர் எல்லைக்காவல் பொலிஸ் நிலைகள்மீது பாகிஸ்தான் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் இரு இந்திய எல்லைக்காவல் பொலிசார் மாண்டதாகவும் நால்வர் காயமடைந்ததாகவும் மற்றும் நால்வரைப்பற்றிய தகவல் கிடைக்கவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

கஞ்சாகோட் பகுதியில் இப்பொழுது நிலைமை கட்டுக்கடங்கிவிட்டதாக கடைசியாகக் கிடைத்த செய்தியொன்று கூறுகிறது.

### மந்திரி நந்தா உறுதி

உள்நாட்டுமந்திரி திரு. குல்சாரிலால்நந்தா நேற்று மாலை கல்கத்தாவில் ஒரு வைபவத்தில் பேசுகையில் கஞ்சாகோட் பகுதிக்கு இந்திய இராணுவம் அனுப்பப்பட்டுள்ளதென்பதைத் தெரிவித்தார். "பாகிஸ்தான் இராணுவத்தைச் சமாளிக்க வேண்டியேற்பட்டதாலேயே அங்கு இந்திய இராணுவம் அனுப்பி வைக்க வேண்டியேற்பட்டது. இப்பொழுது பாகிஸ்தான் இராணுவத்தின் நடவடிக்கை எமது நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டுக்குப் பெரிய சவாலாகத் தோன்றியுள்ளது. தேசமக்கள் ஒரே தேசமாக எழ வேண்டும்" என்று மந்திரி நந்தா கூறினார். எல்லையில் ஆக்கிரமிப்பு நிலைமையை இந்திய தக்கபடி சமாளிக்கும் என்று அவர் கூறினார்.

### அமெரிக்க ஆயுதங்கள்

கஞ்சாகோட் பகுதியில் கைதுசெய்யப்பட்ட நான்கு பாகிஸ்தானியத் துருப்புகளும் உடனடியாக புதுடில்லிக்கு விமானத்தில் கொண்டுவரப்பட்டனர். இங்கு அவர்களை விசாரணை செய்ததில் எல்லையில் நடந்த தாக்குதலில் பாகிஸ்தான் இராணுவத்தினர் அமெரிக்க ஆயுதங்களை உபயோகித்ததாகத் தெரிய வந்ததாம். மூவாயிரம் பாகிஸ்தான் துருப்பினர் கஞ்சாகோட் எல்லைப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களை அங்கு செல்லுமாறு 7-ந்திகதி மாலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் 8-ம் திகதி மாலை அவர்கள் அங்கு வந்து சேர்ந்து 9-ம் திகதி அதிகாலை தாக்குதல் நடத்த ஆரம்பித்ததாகவும் அறியப்பட்டது.

### அஸாம் ராஜ்யப் பகுதியிலும்

அஸாம் ராஜ்யத்தில் கரிம்கஞ்சில் கோவிந்தபூர் பகுதியிலும் பாகிஸ்தானியத் துருப்புகள் இந்திய எல்லைக் காவல் ரோந்துப் பொலீஸ் நிலையங்களை நோக்கி நேற்றுச் சுட்டதாகவும் சுமார் பன்னிரண்டுமணி நேரம் இத் தாக்குதல் நடைபெற்றதாகவும் அறிவிக்கப்படுகிறது.

ஜம்மு காஷ்மீரில் காத்வார் பகுதியில் ஏற்பட்ட கைகலப்பில் இரண்டு பாகிஸ்தானியத் துருப்புகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இக்கைகலப்புச் சம்பவம்பற்றி ஐ. நா. பார்வையாளரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

## முன்னாள் இந்திய உணவு மந்திரி தேஷ்முக் காலமானார்

புதுடில்லி, ஏப். 11

முன்னாள் இந்திய உணவு விவசாய மந்திரி டாக்டர் பஞ்சாபிராவ் தேஷ்முக் நேற்று இரவு காலமானார். இருதய நோய் காரணமாக நேற்று மாலை 7 மணிக்கு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்ட டாக்டர் தேஷ்முக் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டசிறிது நேரத்தில் காலமானர்.

எடின்பரோ, 'ஒக்ஸ்போர்ட்' பல்கலைக்கழகங்களில் படித்துப் பட்டம் பெற்ற டாக்டர் தேஷ்முக் 1925-ம் ஆண்டில் வழக்கறிஞராகத் தொழில் புரிய ஆரம்பித்தார்.

1930-ம் ஆண்டிலிருந்து 37-ம் ஆண்டுவரை மத்திய பிரதேச சட்டசபை அங்கத்தவராகவும் கல்வி மந்திரியாகவும் பணி புரிந்த டாக்டர் தேஷ்முக் 1952-ம் ஆண்டு முதல் 1957-ம் ஆண்டுவரை இந்திய மத்திய அரசாங்கத்தில் உணவு விவசாய மந்திரியாகவும் பணியாற்றினர்.

1957-ம் ஆண்டு முதல் 1963-ம் ஆண்டுவரை கூட்டுறவு மந்திரியாகப் பதவிவகித்த டாக்டர் தேஷ்முக் பல சமூக, ஸ்தாபனங்களிலும் சேவை புரிந்துள்ளார். வெளிநாடுகளில் நடைபெற்ற பல மகாநாடுகளில் அவர் இந்தியாவின் பிரதிநிதியாகவும் கலந்து கொண்டிருக்கிறர்.

### படைகுறைப்புக் கமிஷன் 21-ந் திகதி கூடும்

லண்டன், ஏப். 11

ஐ. நா. படை குறைப்புக்கமிஷனின் கூட்டத்தை மீண்டும் கூட்டவேண்டுமென்ற சோவியத் யூனியனின் யோசனையை பிரிட்டனும் அமெரிக்காவும் ஏற்றுக்கொண்டுள்ளன.

114 அங்கத்தவர்களைக் கொண்ட படை குறைப்புக் கமிஷன் இம்மாதம் 21-ந் திகதி கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இக்கமிஷன் 1960-ம் ஆண்டில் கடைசியாகக்கூடியது.

—

லாவோஸ்

### அமெரிக்க விமானங்கள் வீழ்த்தப்பட்டன

வியன்டைன், ஏப். 11

லாவோஸில் காங்காங்குக்கு உயரே பறந்து சென்ற நான்கு அமெரிக்க விமானங்களை பதட் லோவோப் படையினர் சுட்டு வீழ்த்தினர்.

லாவோஸின் மூத்தரப்புத் தலைவர்கள் மீண்டும் வியன்டைனில் கூடவேண்டுமென பதட் லாவோத் தலைவர் சுவன்னவாங் தெரிவித்துள்ளார்.

### காஷ்மீர் கவர்னர்

ஸ்ரீநகர், ஏப்ரல் 11

ஜம்மு காஷ்மீர் ராஜ்யத்தின் கவர்னராக டாக்டர் கரன்சிங் நேற்று ராஜ்ய தலைமை நீதிபதி முன் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றர். சதிரி யாசத் என முன்பு பதவி வகித்த இவர் சமீபத்தில் சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்திருத்தத்தைத் தொடர்ந்து கவர்னராகப் பதவியேற்றர்.

—

அல்ஜீரியா

### நால்வருக்கு மரணதண்டனை

அல்ஜியர்ஸ், ஏப்ரல் 11

அல்ஜீரிய அதிபர் பென்பெல்லாவின் முன்னாள் நண்பர்கள் நால்வருக்கு நேற்று மரணதண்டனை விதிக்கப்பட்டது.

அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்ததாகக் குற்றஞ்சாட்டி இவர்கள் மீது சென்ற நான்கு நாட்களாக விசேஷ நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது. இரகசியமாக நடைபெற்ற இந்த விசாரணையின் முடிவில் ஹூசைனின் அகமட், மூஸா ஆகியோருக்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. டிடாரும் மற்றொருவரும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை அவர்களுக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டது. மற்றும் இருவருக்கு தலா 20 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

—

### டிட்டோ அல்ஜீரியா செல்கிறர்

பெல்கிரேட், ஏப்ரல் 11

யூகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோ இன்று அல்ஜீரியா செல்கிறர். அல்ஜீரியாவில் சில தினங்கள் தங்கியிருந்து பின் பெல்கிரேட் திரும்பும் [illegible]

## புதிய கல்வி மசோதா விரைவில் தயாராகும்

பம்பலப்பிட்டி, ஞாயிறு

புதிய கல்வி மசோதாவின் தனது ஆரம்ப வேலைகளை கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல தற்பொழுது ஆரம்பித்துள்ளார். இந்த மசோதா மத்திய அதிகார சபைகளையும், ஆலோசனைச் சபைகளையும், மற்றும் கல்வி நோக்கங்களின் கருத்துக்களையும் அதனுள் அமைக்கக் கூடிய முறையில் அதிகாரங்களைக் கொண்டதாயிருக்கும்.

தயாரிக்கப்படவிருக்கும் கல்வி நகல் மசோதா தேசிய கல்விச்சபை தொழில் கல்விச் சபை, ஆகியவற்றின் சிபார்சுகளையும், தொழிற் சங்கங்களாலும் பிற கல்விமான்களாலும் கூறப்பட்ட கருத்துக்களையும் மாற்றுக் கருத்துகளையும் ஒன்று சேர்த்தே தயாரிக்கப்படும். ஆசிரியர்களுக்கு வேண்டிய ஒழுங்கு விதி முறைகளைத் தயாரிக்கும் படி கல்வி மந்திரி கல்வி அதிகாரிகளு உத்தரவிட்டுள்ளார்.

தேசிய அரசாங்கம் இது பற்றி அதன் சிம்மாசனப் பிரசங்கத்திலும் சேர்த்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

### எஃகு ஆலை நிறுவும் திட்டம்

புதுடில்லி, ஏப்ரல் 11

சோவியத் உதவியுடன் நிறுவப்பட்டுவரும் பொக்காரோ எஃகு ஆலை 4-வது திட்டகாலத்துக்குள் முடிவடைந்துவிடுமென சுரங்க மந்திரி திரு. என். சஞ்சீவரெட்டி தெரிவித்தார்.

மேலும் ஒரு எஃகு ஆலை நிறுவப்படுமென்றும் இதுபற்றிய பிரிட்டிஷ்-அமெரிக்க குழுவின் அறிக்கை மே மாத முடிவுக்குள் கிடைத்துவிடுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினர்.

புதிய ஆலை நிறுவுவதற்கு ஆந்திரப்பிரதேசத்தில் விசாகப்பட்டணமும் தமிழ் நாட்டில் சேலமும் மைசூர் ராஜ்யத்தில் ஒரு இடமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் எந்த இடத்தில் ஆலையை நிறுவுவதென இன்னும் முடிவுசெய்யப்படவில்லையெனவும் சஞ்சீவரெட்டி தெரிவித்தார்.

—

### சலுகைகள் ஆபத்து

லக்ஷ்மணபுரி, ஏப்ரல் 11

ஒதுக்கப்பட்ட ஜாதியினருக்கு சலுகைகள் அளிப்பதை காலவரையின்றி நிரந்தரமாக வைத்திருப்பது ஜாதிவாதத்தைவிட ஆபத்தானது என்று டாக்டர் ஜகஜீவன்ராம் தெரிவித்தார்.

ஒதுக்கப்பட்ட ஜாதியினர் பிரச்சினை குறிப்பிட்ட ஒருவகுப்பினரின் பிரச்சினையல்லவென்றும் அது ஒரு தேசியப்பிரச்சினையென்றும் டாக்டர் ஜகஜீவன்ராம் கூறினர்.

### பிரதமருக்கு கோரிக்கை

நல்லூர், திங்கள்

தமிழ்மக்கள் மத்தியில் நல்லுறவை ஏற்படுத்தக் கூடிய வகையில் தேசிய அரசாங்கம் இன்றிலை நிறுவிய பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவுக்கு வாழ்த்து தெரிவித்து இணுவில் இளந்தாரி கோவில் சைவமுன்னேற்றச் சபை காரியதரிசி திரு. சண்முகலிங்கம் கடிதமொன்றினை அனுப்பியுள்ளார். அவர் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

"பிரதமராகப் பதவியேற்றதும் கண்டி தலதாமாளிகைக்குச் சென்று பிரார்த்தனை செய்தது போல தமிழ்ப்பகுதிகளில் உள்ள புராதனப் பெருமை பெற்ற பிரசித்தமான ஆலயங்களுக்கு வந்து பிரார்த்தனை செய்யுமாறு வண்ணம் கேட்டுக் கொள்ளுகின்றோம்".

—

### கருத்தரங்கு

நல்லூர், திங்கள்

வலி-வடக்கு கிராமமுன்னேற்றச் சங்கங்களின் சமாஜம் சமூக, பொருளாதார, கல்வி, சுகாதாரம் சம்பந்தப்பட்ட கருத்தரங்கமொன்றினை நடத்துவதென முடிவு செய்துள்ளது. இம்மாதம் 26, 27-ந் திகதிகளில் இக்கருத்தரங்கம் மல்லாகத்தில் நடைபெறும்.

வலி-வடக்கு காரியாதிகாரி கந்தோரில் பண்டிதர் வ. நடராசன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கருத்தரங்கம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

—

### விவசாயப் பிரசாரம்

நல்லூர், திங்கள்

இணுவில் [illegible] விவசாயக் கழகம் பம்பாய் வெங்காயம், உருளைக் கிழங்கு போன்ற புதிய பயிர்களைப் பயிரிடும் படியும், சிறு கைத்தொழில்களை ஆரம்பிக்கும் படியும பொதுமக்கள் மத்தியில் தீவிர பிரசாரம் செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இது சம்பந்தமாக ஊர்கள் தோறும் பிரசாரக் கூட்டங்கள் நடத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## வியட்நாமில் தொடர்ந்து அமெரிக்கா தாக்குதல்

### ஜோன்சனின் கருத்துக்கு பதிலில்லாதது குறித்து ரஸ்க் கவலை

வாஷிங்டன், ஏப்ரல் 11

சீனப் பிரதேசத்தின் மீது பறந்து செல்லக்கூடாது என்று அமெரிக்க போர் விமானங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் டொன்கின் வளைகுடாவிலுள்ள தீவப்பிரதேசமான ஹைனான் மீதும் பறந்து செல்லக்கூடாதென உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அமெரிக்க ராஜாங்கக் காரியதரிசி திரு. டீன் ரஸ்க் தெரிவித்தார்.

வியட்நாமில் சண்டையை நிறுத்தவும் அப்பகுதியில் அமைதியை ஏற்படுத்தவும் 'நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை'க்கு அமெரிக்கா தயாராக இருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. ஜோன்ஸன் வெளியிட்ட பிரகடனத்துக்கு சீனாவிடமிருந்தும் வடக்குவியட்நாமிலிருந்தும் சாதகமான கருத்து வெளிவராதது குறித்து திரு. ரஸ்க் கவலையும் அதிருப்தியும் தெரிவித்தார்.

### தாக்குதல் நீடிப்பு

இதேசமயம் வடக்குவியட்நாமில் நேற்றும் அமெரிக்க விமானங்கள் தொடர்ந்துதாக்குதல் நடத்தின. வடவியட்நாம் தலைநகரான ஹனோய்க்குச் செல்லும் பாலமொன்று நேற்று தகர்த்தெறியப்பட்டது.

நேற்று [illegible] அமெரிக்க [illegible] துருப்புகள் [illegible] தளத்தில் இறங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகப் பிரிவு நிறுவப்பட்டால் போதாது

## சைவப்பல்கலைக்கழகம் இங்கு அவசியம்''

### காரியாதிகாரி கருத்து

கல்லூர், திங்கள்

'பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பிரிவு யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டாலும் இராமநாதன் இந்துப் பல்கலைக் கழகம் சைவ கலாசார வாழ்க்கையை வளம்படுத்தும்வகையில் நிறுவப்படுதல் அவசியமானது' என்று வலி-வடக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசபிள்ளை இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இராமநாதன் மகளிர் கல்லூரிப் பெற்றோர் ஆசிரியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு கல்லூரி அதிபர் திருமதி கணேசன் தலைமைவகித்தார். இக்கூட்டத்தில் காரியாதிகாரி தொடர்ந்து பேசியதாவது:-

சேர். பொன். இராமநாதன் தமது சைவப் பணிகளைத் தொடர்ந்து செய்யக் கூடியவாறு 60 லட்சம் ரூபாவுக்கு அதிகமான ஆஸ்திகளை விட்டுச் சென்றுள்ளார். சைவப் பிள்ளைகள் சங்கீதம், ஒழுக்கம், கல்வி சமயம் போன்றவற்றில் சிறந்து விளங்கவேண்டும் என்றே இராமநாதனவர்கள் இக்கைங்கரியத்தைச் செய்தார்.

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றதனால் இராமநாதனவர்களை கல்விப் பணிக்கு விட்ட ஆஸ்திகள் அரசினரைச் சேர்ந்தன. இந்த நிலையில்தான் காலஞ்சென்ற செனட்டர் ச. நடேசபிள்ளை அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு இராமநாதனவர்களின் பணிகள் தொடர்ந்து நடைபெறக்கூடிய வகையில் பல்கலைக் கழக மசோதா ஒன்றினைத் தயாரித்தார். இம்மசோதா பாராளுமன்றுக்குக் கொண்டுவருவதற்கு முன்னோடியாக மானியமும் ஒதுக்கப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் தான் பல்கலைக்கழகப் பிரிவு நிறுவப்படும் யோசனை உருவாகியுள்ளது. பேராதனைப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியைத் தீர்த்துக் கொள்ளும்வகையில் காலி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பல்கலைக் கழகப் பிரிவு நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழகக் கிளை யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் விரும்பிக் கேட்டால் என்ன கேட்காவிட்டாலென்ன வந்தடையும், எனவே இக்கிளை வரப்போகிறது தானே, இந்துப் பல்கலைக்கழகம் வேண்டாம் என்று எண்ணும் மனோபாவமும் உருவாகிவருகிறது. இது தவறானது. சைவப் பிள்ளைகள் சைவக் கல்வியும், அத்துறையில் ஆராய்ச்சியும் பெற்றவர்களாக விளங்கவேண்டுமானால் இந்துப் பல்கலைக் கழகம் அவசியமானது.

பல்கலைக் கழகப் பிரிவைவிட இந்துப் பல்கலைக்கழகத்தின் மூலம் தமிழ் மக்கள் வாழும் பிரதேசத்தில் புதை பொருளாராய்ச்சியும், சமய தத்துவ ஆராய்ச்சியும் வளமுன்னராக்க முடியும், சைவப் பிள்ளைகள் சைவக் கலாசாரத்தில் ஊறித் திளைத்தவர்களாகவும் எதிர்காலத்தில் வாழ முடியும்.

இராமநாதன் மகளிர் கல்லூரி மாணவிகள் கலைத்துறையில் காட்டும் ஆர்வம்போல விஞ்ஞானத்துறையிலும் ஆர்வமுள்ளவர்களாக இருக்கவேண்டும். சைவப் பெண்கள் விஞ்ஞானக் கல்வி பெற்றவர்களாகவும் இருக்கவேண்டும். அப்போது சைவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்ததாக இருக்கும்.

வழக்கறிஞர் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

## புத்தரகித்தவும் சோமும்

பம்பலப்பிட்டி, வெள்ளி

சதிவழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு தலா 10 வருடக் கடூழியச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட 11 பிரதிவாதிகளுக்கும் பலவிதமான வேலைகள் சிறைச்சாலையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இரும்பு வேலையும், மரவேலையும், சமையல்வேலையும், அச்சகோர்க்கும் வேலையும் 11 கைதிகளுக்கும் பகலில் கொடுக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலையில் இவர்கள் மற்றவர்கள் அணிவது போன்ற உடையை அணிந்துள்ளார்கள். இவர்களுக்கு எந்தவிதமான வேலை கொடுக்கப்படவேண்டுமென்று கேற்று சிறைச்சாலை அதிகாரிகளால் முடிவு செய்யப்பட்டது.

11 குற்றவாளிகளும் பொதுவான அறையில் சந்திக்கலாம். அங்கே ஒரு வானொலிப்பெட்டி வைக்கப்பட்டிருக்கின்றது. இவர்களுக்கு எந்த விதமான பாகுபாடும் காண்பிக்கப்படமாட்டாதென்று தெரியவருகிறது.

கீழ்க்கண்டவேலைகள் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

நூல்நிலையம்— எப். சி. டி. சேரம், தையல் பகுதி— மொறிஸ் டி மெல், பி. ஆர். ஜேசுதாசன், சலவைப்பகுதி— வி. மத்தியூஸ், மரவேலைப் பகுதி— வி. வி. தியகாயகா, சமையல்பகுதி- எல். சி. எஸ். ஜிரசிங்கி, அச்சகப்பகுதி— வி. ஈ. பெரேரா, தையல் பகுதி— சி. விஜயசிங்கி, தும்படிக்கும்பகுதி— ஜெபிஸ் டி மெல், கதிரைபின்னும்பகுதி— சிட்னி டி சொய்சா. அச்சகப் பகுதி— டக்ளஸ் லியனகே.

எப். சி. டி. சேரமும், புத்தரகித்தவும் நூல்நிலையத்தில் வேலைசெய்கின்றனர்.

## சேவைக்கு பாராட்டு

கல்லூர் திங்கள்

மல்லாகம் வாணிவாச கல்வி நிலையப் பொறுப்பாளரும் ஆசிரியருமான திரு. எம். எஸ். சுப்பிரமணியத்தின் சேவையைப் பாராட்டி வாணிவாச இலக்கிய கலாமன்றம் பாராட்டுவிழாவொன்றினை நடத்தியது. திரு. சுப்பிரமணியத்தின் 61-வது பிறந்த தினத்தையொட்டி இப்பாராட்டுக்கூட்டம் திரு. வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்றது.

கண்பார்வையற்ற நிலையில் கடந்த 15 ஆண்டுகளாக இலக்கிய பண்புபுரிந்து வரும் திரு சுப்பிரமணியத்தின் தொண்டுகளை இளைப்பாறிய வித்தியாதரிசி திரு. அ. சரவணமுத்து, பண்டிதர் நா. சமசிவாயம், திரு. தம்பிப்பிள்ளை ஆகியோர் பாராட்டிப் பேசினர். திரு. செ. ராஜகுலேந்திரன் நன்றி கூறினர். திரு. என். எஸ். உருத்திராபதி, க. சோமசுந்தரேஸ்வர சர்மா, திரு வ. சிவானந்தராஜாவின் இசைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன.

## ஹோசிமின் கருத்து

ஹானோய், ஏப். 9

வியட்நாம்பற்றி ஜெனிவா மகாநாடு ஒன்று நடைபெறுமுன், அமெரிக்கா தென்வியட்நாமிலிருந்து வெளியேறிவிடவேண்டுமென்ன வடவியட்னாம் அதிபர் டாக்டர் ஹோசிமின் நிருபர்களிடம் கூறினர்.

## கிளிநொச்சிக்கு சுகாதார வசதிகள்

### எம். பி. நடவடிக்கை

கிளிநொச்சி, ஞாயிறு

சுகாதார நிரந்தர அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு ஞ. பாலசிங்கத்தைகிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் சந்தித்து தமது தொகுதிக்கு வேண்டிய மருந்துவகைகள் பற்றியும், வைத்திய வாகன சேவை பற்றியும் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

கிளிநொச்சிக்கு மேலதிக டாக்டர்கள் நியமிப்பது பற்றியும் பூநகரிக்கு வைத்திய வாகன சேவையை நடைமுறைக்கு கொண்டுவருவது பற்றியும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் திரு. பாலசிங்கம் கூறியதாகவும் தெரியவருகிறது. பூநகரிக்கு டாக்டர் நியமிக்கப்படவேண்டிய விஷயம் பற்றியும் இப்பேச்சுவார்த்தையின்போது ஆராயப்பட்டது.

## 'புயல் நிவாரண உதவி வழங்குக'

கிளிநொச்சி, ஞாயிறு

புயலாலும் நீண்ட வரட்சியாலும் இருமுறை அடுத்தடுத்து நெல் வேளாண்மை இல்லாமையாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி தொகுதி மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் கிளிநொச்சித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் ஆறு அம்சத் திட்டமொன்றை சமூக சேவை மந்திரி திரு அசோக கருணாரத்தினவிடம் சமர்ப்பித்துள்ளார்.

அத்திட்டத்தில் புயலில் சிக்கிய வீடுகள், பாடசாலைகள், நெசவுநிலையங்கள் புதுப்பிக்கப்படவேண்டும் எனவும், மா, பலா, தென்னை, வாழை மூலம் பயிர்களால் நஷ்ட மேற்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க

(5-ம் பக்கம் பார்க்க)





உண்மையான லாகரின் சுவை எப்படியிருக்கவேண்டுமோ அப்படியான சுவையுடையது "திறீ கொயின்ஸ்"......

உலகத்திலேயே சிறந்த மோல்ற் — ஹொப்ஸ் ஆகியனவும், இலங்கையின் மிகச் சுத்தமான தண்ணீருங் கொண்டு, வடிதொழிலின் உயர்ந்த தரங்களுக்கமைய முறைப்படி வடிக்கப்பட்டு, பக்குவம்பண்ணப்படுகிறது திறீ கொயின்ஸ்.

குளிர்ந்த திறீ கொயின்ஸ் லாகரைப் பரிமாறி உங்களையும் உங்கள் விருந்தினரையும் கௌரவியுங்கள். அது அதிசயிக்கத்தக்க திருப்தி தருவதைக் காண்பீர்கள்.

மெக்கலம் புறூவெறிஸ் (சிலோன்) லிமிடெட்

வினியோகிஸ்தர்கள் :- ஷாவலாஸ் அன் கெட்ஜஸ் லிமிடெட், கொழும்பு 3.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பவுண் விலை குறைந்துள்ளது

பம்பலப்பிட்டி, ஏப்ரில் கடந்த சில நாட்களாக பவுணின் விலை குறைந்துள்ளதாகத் தெரிய வருகிறது. ஒரு பவுண் தற்பொழுது 180 ரூபா விற்பனையாகிறது. இந்து-பௌத்த புதுவருட பிறப்பை முன்னிட்டு தற்பொழுது பவுண் பெறுமனவிற்கு விலைப்படுகின்றதென்றும் கூறப்படுகிறது.

## புயல் நிவாரண ...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்றும், இலவசமாக விதைநெல்லு, கார்த்துப் பயிர் விவசாயிகளுக்கு கொடுக்கப்படல் வேண்டும் என்றும், மக்களின் புனர் வாழ்விற்காக நிவாரணமான பண உதவி வழங்கப்படல் வேண்டும் என்றும், வேலையற்றவர்களுக்கு உழைக்கும் வாய்ப்பளிக்கத்தக்கதாக நிவாரண வேலை தொடுக்கப்பட வேண்டும் என்றும் 63,64, 65-ம் ஆண்டுகளுக்குரிய நிலவரி வரிகளை அறவிடாது விட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

சமூக சேவை மந்திரி திரு. அசோகா கருணாரத்தினவை திரு. கா. பொ. இரத்தினமும் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகமும் இந்த வாரம் நேரில் சந்தித்து பேச்சு வார்த்தைகள் நடத்துவார்கள் எனத் தெரியவருகிறது.


REGAL — JAFFNA
NOW SHOWING
Sexy Night Shows!
AROUND THE WORLD IN 90 NIGHTS
(Totalscope - Color)
[ ADULTS ONLY ]


## தேசிய விளையாட்டுப் போட்டி

கள்ளூர், திங்கள்

யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 17-ம் திகதி தேசியதின விளையாட்டுப்போட்டி ஒன்று நடத்தப்படவிருக்கிறது. யாழ்ப்பாணம் பொலிஸ் பகுதியினரும் காரியாதிகாரிகளும் சேர்ந்து நடத்தும் இத்தேசிய தின விளையாட்டுப்போட்டியில் பல விளையாட்டுகள் இடம் பெறவிருக்கின்றன.

## வானொலி நிகழ்ச்சிகள்

### திங்கள் 12-4-65

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-55 உதயகீதம், 6-50 சைவசுந்திக்கதை, 6-55 தேனிக்ககற்சிக்ககை, 7-00 கதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த மெல்லிசை, 8-15 இசையிய கீதங்கள்.

பகல் 12-00 திரைகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் மலர், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல் — சமவயா, 7-15 வீணை — மிருதங்கம், 8-00 முன்னிலைக்கப்பன், 9-15 நாடக வாத்தியக் கச்சேரி 9-30 தமிழ் முழக்கம், 9-45 நேயர் விருப்பம்.

## சீன தூதர் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விழாவின் கலந்துகொள்வதற்காக இக்குழு ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். இந்த இருக்கும் மக்கள் அங்கத்தவர் களும் விசா வழங்க கூடாதென்று ஜகார்த்தாவிலுள்ள இலங்கை காரியாலயத்தினருக்கு வெளிநாட்டு அமைச்சு உத்தரவு பிறப்பித்துள்ளது.


கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாசா (வெள்ளவத்தை) — கெப்பிட்டல் (கொட்டாஞ்சேனை)
நவா (கும்பனித்தெரு) — விஜயா (மட்டக்களப்பு) — மொடர்ன் (பண்டாரவளை)
விஜிதா (அட்டன்) — தீபொலி (நுவரேலியா) — ஜூப்பிட்டர் (குருநாகல்)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30



எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்


## தேவை

அனுபவம் வாய்ந்த கைத்தறி நெசவாளர் பத்துப்பேர் பரந்தன் ப. நோ. கூ. சங்க நெசவுநிலையத்துக்குத் தேவை. வயது, கல்வி, அனுபவம் முதலிய விபரத்துடனும், இரு நற்சாட்சிப்பத்திரங்களுடனும் 24-4-65க்கு முன் இருபாலாரும் மனுச்செய்யலாம். பெண் நெசவாளர் கூடிவசிப்பதற்கு பிரத்தியேகமான வீடு ஒழுங்கு செய்து தரப்படும். 40

## நாட்டில் ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

த் காரியங்கள் கைகூடும், எந்தத் தொழிலைச் செய்யும் பொழுதும் கூட்டுச்சேராமலிருப்பது நலம், புரட்டாதி, கார்த்திகை மாதங்களில் உங்கள் கோடுகள் வாங்கல் கட்டுப்படுத்தி, நடக்கவும் எந்தவிதமான முயற்சியும் இம்மாதங்களில் நன்மையைத் தராது.

**சிங்கம்**

(மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதத்தில் ஜெனனமானவர்களுக்கு)

உங்களுக்கு இவ்வாண்டில் பலவிதமான தப்பான எண்ணங்கள் உதயமாகும் பொதுவாக எந்த விஷயத்தையும் பிழையான நோக்கத்துடன் அணுகுவீர்கள் அதனால் பின்னர் பலவிதமான துன்பங்களையும் கஷ்டத்தையும் அடைவீர்கள் உறவினர்களின் பகை வந்து சேருவதால் பலவிதமான இன்னல்களையும், காரியத்தடைகளையும் அனுபவிக்க வேண்டி நேரிடும் உங்களை அறியாமல் பலவிதமான பிழைகளைச் செய்வதால் பலருடைய பகைமையைச் சம்பாதிக்க நேரிடும் கன்பர்களை மதித்து நடந்தீர்களானால் அவர்களுடைய உதவியினால் நிலைமைகளை ஓரளவு சமாளிக்கலாம் ஐப்பசி மாதத்தில் தொழிலில் சிறிது லாபம் ஏற்படக்கூடும்,

**கன்னி**

(உத்திரம் 2, 3ம் பாதங்களிலும் அத்தம் சித்திரை 1, 2ம் பாதங்களிலும் ஜெனனமானவர்களுக்கு)

உங்களுக்கு இந்த ஆண்டில் முன்னெலிலும் பார்க்க அதிக செல்வாக்கு உண்டாகும் தொழில் முயற்சியில் முற்பகுதியில் அதிக நன்மையில்லாவிட்டாலும் போகப்போகத் தொழில் விருத்தியுண்டு. நீங்கள் யாருக்காவது பணவுதவி செய்ய உத்தேசித்திருந்தால் அந்த விஷயத்தை அதிக சிரத்தையுடன் ஆலோசிக்கவேண்டும். அதனால் உங்களுக்கு ஆபத்து ஏறபட்டாலும் ஏற்படலாம். இவ்வாண்டில் உங்களுடைய குடும்பத்தினரால் உங்களுக்கு மிகவும் சந்தோஷம் ஏற்படும். உடன்பிறந்த சகோதரர்களால் பெரும் மகிழ்ச்சியும் உதவியும் ஏற்படும்.

**துலாம்**

(சித்திரை 3, 4ம் பாதங்களிலும், சுவாதி, விசாகம் 1, 2, 3ம் பாதங்களிலும் ஜெனனமானவர்களுக்கு)

எந்தவிதமான தொழில் முடைவேற்பட்டாலும் அதைச் சமாளிக்கக்கூடிய சந்தர்ப்பமும் வசதியும் உங்களுக்கு ஏற்படும், உங்கள் உதவிக்கு முன்வர மற்றவர்கள் தயங்குவார்கள். அதைக்கண்டு மனம் தளராது ஊக்கத்துடன் உழைப்பீர்களானால் எந்தக் காரியத்தையும் எளிதில் சாதிப்பீர்கள், அநாவசியமாக ஒருவருடைய உதவியையும் நாடாதீர்கள், ஆண்டு பிற்பகுதியில் நிலைமைகள் உங்களுக்குச் சாதகமாக மாறும், மாசி மாதமளவில் சகோதரவழிகளால் பலவிதமான தொல்லைகள் ஏற்படும், இவ்வாண்டில் உங்களுக்கு வியாழபகவானுடைய சுகம் கெட்டிருக்கிறது. தெட்சணாமூர்த்தியை வழிபடுவது நல்லது.

**விருச்சிகம்**

(விசாகம் 4ம் பாதத்திலும் அனுஷம் கேட்டையிலும் ஜெனனமானவர்களுக்கு)

(6-ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி நகரசபை

### விளம்பரம்

சாவகச்சேரி நகரசபைக் காவலாளி ஒருவரைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பங்கள் 26-4-65த் திகதி நண்பகல் 12 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாகத் தலைவர், நகரசபை, சாவகச்சேரி என விலாசமிட்டு பதிவுத்தபாலில் அனுப்பப்படவேண்டும்.
2. விண்ணப்பகாரரின் வயது 26-4-65ல் இருபத்தைந்திற்குக் குறையாமலும், நாற்பதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
3. தமிழில் அல்லது ஆங்கிலத்தில் ஏழாம் வகுப்பு சித்திபெய்தியவராயிருத்தல்வேண்டும்.
4. முன்னர் பொலிஸ் அல்லது ஆமியில் சேவை செய்த அனுபவமுடையவர் விரும்பத்தக்கது.
5. இரு நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகளும் ஏழாம் வகுப்பில் சித்தி பெய்திய தராதரப் பத்திரத்தின் பிரதியும் விண்ணப்பத்துடன் இணைக்கப் படவேண்டும்.
6. சம்பள வாழ்க்கைப்படி உட்பட மாதாந்தம் ரூபா 95/- வழங்கப்படும்
7. ஆறுமாத காலத்திற்குத் தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.
8. தேர்ந்தெடுக்கப் படுபவர் ரூபா 500/- பெறுமதியான ஆதனப்பிணை அல்லது கம்பெனிப் பிணை கொடுக்கவேண்டும்.

இ. சிவகுரு,
தலைவர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபைக் காரியாலயம்,
சாவகச்சேரி,
9-4-65.

## மனேச்சர் தேவை

சண்டிருப்பாய் மாகியப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மனேச்சர் ஒருவர் தேவை. விண்ணப்பம் 30-4-65க்கு முன் காரியதரிசிக்கு அனுப்பப்படல்வேண்டும், விண்ணப்பகாரர் கூட்டுறவுத் தராதரப் பத்திரம் பெற்றவராயும், 35வயது தொடக்கம் 55 வயதுக்குட்பட்டவராயும் தகுந்த பிணை கட்டக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும், 2 நற்சாட்சிப் பத்திரத்துடன் விண்ணப்பித்தல் வேண்டும் மாதாந்த சம்பளம் ரூ. 100 தொடக்கத்தில் வழங்கப்படும்.

காரியதரிசி, சண்டிருப்பாய் மாகியப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
சண்டிருப்பாய்
10-4-65. 44

## வரி விளம்பரம்

### தேவை

அ. ப. நோ. கூ. சங்க நெசவு நிலையத்தில் நெசவுவேலை செய்வதற்கு பெண்பாலாரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நெசவு ஆசிரியப் பயிற்சித் தராதரம் உடையோர் தகுதிகளைக் குறித்து 16-4-65க்கு முன் சங்கக் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும். காரியதரிசி, பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், அளவெட்டி. 42

### விற்பனைக்கு

பாவித்த இலங்கை முத்திரைகள் விலைக்கு வாங்கப்படும், விபரங்களுக்கு த. பெ. இல. 896, கொழும்பு. (P. O. Box 896, Colombo) 38

டயர், டியூப்புகள் எமது வாடிக்கைக்காரருக்கு வழமை போல் கட்டுப்பாட்டு விலைக்கு பதிவுசெய்து கொடுக்கப்படும். ராமகிருஷ்ணா, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன் 7179. 37

### அறிவித்தலும் அன்போடு வேண்டலும்

25-4-64ல் சிவபதம் அடைந்த திருவாளர் வைத்தியலிங்கம் போல் இராஜகோபால், எஞ்சினியர் அவர்களின் முதலாவது சிராத்த தினம் 14-4-65 புதன்கிழமை வருகின்றது.

குறித்த ஆட்டைத்திவச தினமாகிய அன்னதானமும் அன்று பகல் 12 மணிவரையில் எஞ்சினியர் அவர்களது 6ம் நம்பர் மகாத்மா காந்தி வீதியில் உள்ள இல்லத்தில் சிறப்பாக நிகழ இருக்கிறது.

உறவினர், அன்பர்கள் யாவரும் வந்து சிறப்பித்துப் பங்குபற்றி ஏகுமாறு சிவபதமெய்திய பெரியாரின் மனைவியும் மக்களும் ஆகிய நாம் வேண்டிக்கொள்கிறோம்.

ஸ்ரீமதி W. F. இராஜகோபாலும் மக்களும்.

'சாந்திநிகேதனம்'
(SANTINIKETAN)
6, மகாத்மா காந்தி வீதி,
யாழ்ப்பாணம்.
6-4-65 34




ராதா மின்சார மருந்து

தலையிடி, ஒற்றைத் தலைவலி, ஜலதோஷம், முக்கடைப்பு, வலிப்பு, நோவு, உளைவு, வீக்கம், நரம்புச் சுளுக்கு, கைகால் முடக்கு, வாதம், பக்கவாதம், மொளிவாதம், வாத இரணம், வெட்டுக்காயம், நரம்புச் சிலந்தி, பிளவை, புரையோடும் ஆறாத புண்கள், காதுவலி, காதில் சீழ் வடிதல், பீநிசம், பல்வலி, அரணை வீக்கம், தேள் விஷம், நாய்கடி இவை வெளிப்பூச்சினாலும், வாந்திபேதி, அஜீரண பேதி, உஷ்ணபேதி, வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், வாய்வு, மாரடைப்பு முதலிய அநேக ரோகங்கள் உள்ளுக்குப் பாவிப்பதாலும் சில நிமிஷங்களில் நீங்கிவிடும்

தயாரிப்பாளர்கள் ராதா புரொடக்ட்ஸ்

விநியோகஸ்தர்கள்: எஸ். சுப்பிரமணியம் அண் கோ.

புட்டி ஒன்றின் விலை ரூபா 1-50
வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன் உண்டு


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

